بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 8

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

25 ஜமாதியுல் சானி 1441 ஹிஜ்ரி கமரி 20 தப்லீக் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி 20 பிப்ரவரி 2020


## அல்லாஹ்வின் கட்டளை

اَلَّذِيۡنَ اسۡتَجَابُوۡا لِلّٰهِ وَالرَّسُوۡلِ مِنۡۢ بَعۡدِ مَاۤ اَصَابَهُمُ الۡقَرۡحُ ۛ لِلَّذِيۡنَ اَحۡسَنُوۡا مِنۡهُمۡ وَاتَّقَوۡا اَجۡرٌ عَظِيۡمٌ

தங்களுக்குக் காயம் ஏற்பட்டதன் பிறகு(ம்) அல்லாஹ்வினுடையதும், தூதருடையதுமான கட்டளையினை ஏற்றுக் கொண்டவர்களுள் தங்கள் கடமையினை நன்முறையில் நிறைவேற்றியவர்க்கும் இறையச்சத்தை மேற்கொண்டவர்களுக்கும் பெரும் கூலி உண்டு. (3:173)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மனிதன் தனது ஆற்றலை பயன்படுத்தாத வரை அவன் வளர்ச்சி அடைவதில்லை...**

**முஸ்லிம்கள் எந்த அளவு மகிழ்ச்சிக்குள்ளாக வேண்டும் என்றால் அவர்களை இறைவன் கருணைக்கு தகுதியானவர்களாக கருதினான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### பொருட்களின் தன்மைகளின் பெயரே அறிவு ஆகும்

அறிவு என்பது என்ன? பொருட்களின் தன்மைகளின் பெயர் மட்டுமே ஆகும். கோள்கள், நட்சத்திரங்கள், தாவரங்கள் தாக்கங்களை கொண்டதாக இல்லை என்றால் இறைவனின் அலீம் என்ற பண்பின் மீது மனிதன் நம்பிக்கை கொள்வது கடினமாகியிருக்கும்.

நமது அறிவின் அடித்தளம் பொருட்களின் தன்மைகள் ஆகும். இது ஒரு உறுதியான செயல் ஆகும். நாம் இதிலிருந்து ஞானத்தை கற்கவேண்டும் என்பது நோக்கம் ஆகும். அறிவின் பெயர் ஹிக்மத் என்றும் வைக்கப்பட்டுள்ளது. எனவே தான் வமை யுஃதல் ஹிக்மத ஃபகத் ஊதிய கைரன் கசீரா (2:270) எனக் கூறப்பட்டுள்ளது.

### இஃதினஸ் ஸிராதல் முஸ்தகீம வின் நோக்கம்

ஆக இஃதினஸ் ஸிராதல் முஸ்தகீம வின் நோக்கம் இதுவாகும், இந்த துஆவின் போது முன்அம் அலைஹிம் என்ற அந்த மக்களின் செயல்கள், ஒழுக்கங்கள், கொள்கைகளை பின்பற்ற வேண்டும் . மனிதனால் எதுவரை முடியுமோ கொள்கைகள், ஒழுக்கங்கள், மற்றும் செயல்களை பயன்படுத்தவேண்டும். மனிதன் எதுவரை தனது ஆற்றலை பயன்படுத்துவது இல்லையோ அதுவரை அவன் வளர்ச்சி அடைவதில்லை. அல்லது அதனை உரிய காரணம் மற்றும் நோக்கத்தை விட்டு விலக்கி, அது அதற்காக படைக்கப்படாத வேறு பணிகளை வாங்கினால் அது வளர்ச்சியின் வழிகளில் முன்னேறுவது இல்லை. இந்த விசயத்தை நீங்கள் அனுபவத்தில் பார்க்கமுடியும். கண்ணை நாற்பது நாட்கள் மூடி வைத்திருந்தால் அதன் பார்க்கும் திறன் சென்றுவிடும். எனவே இது முக்கிய வேலையாகும், முதலில் ஆற்றல்களை அதன் இயல்பின் வேலைகளில் ஈடுபடுத்துவதால் அது மேலும் அதிகரிக்கும். நமது சுய அனுபவம் என்னவெனில் செயல் ஆற்றல்களை எந்த அளவு பயன்படுத்துகிறோமோ அல்லாஹ் அதில் பரகத்தை இறக்குகிறான். முதலில் கொள்கைகளை, ஒழுக்கங்களை, செயல்களை சரிசெய்யவேண்டும் என்பது அதன் பொருள் ஆகும். பிறகு இஃதினஸ் ஸிராதல் முஸ்தகீம என்ற துஆவை வேண்டினால் அதன் விளைவு முழுமையான முறையில் வெளிப்படும்.

### காலம் சென்ற சமுதாயம் எனக்கூறக் காரணம்

குறிப்பாக தெரியவருவதாவது, இந்த காலம் சென்ற சமுதாயம் எவ்வாறான ஒரு காலத்தில் தோன்றியது எனில் அதற்கு அழிவுகள் உருவாகி இருந்தன. மனிதனின் செயல்கள், தீமைகள் மற்றும் பாவங்களின் பக்கம் ஒரு கல் கீழ்நோக்கி வருவது போன்று இருந்தன. பாவங்கள் அதிகரித்து இருந்ததினால் மரணித்த சமுதாயம் எனக்கூறப்பட்டது. ஸஹரல் ஃபஸாது ஃபில் பர்ரி வல்பஹ்ரி (29:42) என இறைவன் கூறியது போன்றும் மேலும் ஒரு இடத்தில், யுஹ்யில் அர்ள பஃத மவ்திஹா (29:20) கூறியது போன்றும் இருந்தது. இந்த அனைத்து வசனங்களை பார்க்கும் போது தெரியவருவதாவது, இந்த இரு வசனத்திலும் இறைவன் இரண்டு வரைபடத்தை காண்பித்துள்ளான். முதலில் கூறியது நமது நபி (ஸல்) அவர்கள் பிறந்து இருந்த அந்த காலம் ஆகும். அப்போதும் உலகின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருந்தது, நல்லொழுக்கம், செயல்கள், கொள்கைகள் அனைத்தின் பெயர் மற்றும் அடையாளம் இல்லாமல் போயிருந்ததால் இந்த சமூதாயம் மரணித்ததாக கூறப்பட்டது. ஏனெனில் அப்போதும் மிகப்பெரிய கருணையின் தேவை இருந்தது எனவே தான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மா அர்ஸல்னாக இல்லா ரஹ்மதல் லில் ஆலமீன் எனக்கூறப்பட்டது (22: 108)

எந்த மனிதருக்கு பாம்புகள் நிறைந்த பூமியில் நடக்க கட்டளை தரப்படுமோ அவரை பரிதாபத்திற்குரியவர் எனக் கூறப்படும். அதாவது மிகப்பெரிய ஆபத்துகள் மற்றும் கடுமையான ஆக்கினைகள் எதிர்வருது. ஆகவே இது கருணையின் தேவையுடையது என்பதனால் மரணித்த சமுதாயம் எனக்கூறப்பட்டது. மனிதனுக்கு எப்போது கஷ்டமான வேலை தரப்படுகிறதோ அந்த கஷ்டம் கருணையின் தேவை உடையதாகும். தீமையின் அனுபவம் உள்ள, தீய சிந்தனைகளை செயல்படுத்துபவர்களை எதிர்த்து நிற்பது பிறகு உம்மீயாக இருப்பது எவ்வாறு ஹஸ்ரத் அவர்கள் நாம் உம்மீ ஆக உள்ளோம் மேலும் கணக்கு தெரியாது என கூறுகிறார்கள் எனவே உம்மீகளான அவர்கள், ஏமாற்று மற்றும் தீமைகளில் அனுபவமுள்ள, தீய சமுதாயத்தை எதிர் கொள்ளவேண்டியது வந்தது. எனவே மரணித்த சமுதாயம் என இதற்கு பெயர் வைக்கப்பட்டது.

முஸ்லிம்கள் எந்த அளவு மகிழ்ச்சிக்குள்ளாக வேண்டும் என்றால் அவர்களை இறைவன் கருணைக்கு தகுதியானவர்களாக கருதினான். ஆரம்பத்தில் போதனையாளர்கள் நபிமார்கள் எந்த நேரத்தில் வந்தனர் எனில் மக்கள் ஏமாற்றை அறியாதவர்களாக இருந்தனர் மேலும் சிலர் தமது சமுகத்திற்கே வந்தனர், ஆனால் இப்போது மக்கள் ஏமாற்று மற்றும் உலக அறிவு, வித்தைகள் மற்றும் தத்துவம் அறிவியலில் கைதேர்ந்தவர்கள், மேலும் நேர்மையாளர்களுக்கு இந்த உலகத்தின் வெளிப்புற கல்வி, பௌதீக அறிவில் இருந்து மேலும் அதன் இடையிலான திட்டங்கள் மற்றும் வாதங்களிலிருந்து மிகக் குறைவாகவே தொடர்பு உள்ளது. ஒரு ஹதீஸில் வருகிறது, ஈஸாவே ! உமக்கு பிறகு ஒரு சமுதாயத்தை நான் உருவாக்கப் போகிறேன் அவர்கள் அறிவு அற்றவர்களாக, ஞானம் அற்றவர்களாக இருப்பார்கள். அதாவது உம்மீ ஆக இருப்பார்கள். அன்னார் வினவினார்கள் யா ரப்பி கைஃப யஃரிஃபூனக ? அல்லாஹ்வே ! அவர்கள் ஞானம் மற்றும் அறிவு அற்றவர்களாக இருந்தால் உன்னை எவ்வாறு அறிந்துகொள்வார்கள்? அல்லாஹ் கூறுகிறான் நான் எனது ஞானம் மற்றும் அறிவை வழங்குவேன். (மல்ஃபூஸாத், தொகுதி 1 பக்கம் 107–109 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**எந்த மார்க்கத்தை கலீஃபா எடுத்து வைப்பாரோ அது இறைவனது பாதுகாப்பில் இருக்கின்றது**

**கிலாஃபத் எத்தகைய ஒரு விஷயம் என்றால் இதனை விட்டு பிரிந்து செல்வது மனிதனை எந்தவொரு கண்ணியத்திற்கும் உரியவனாக ஆக்காது**

**இறை அறிவிப்பை கொண்டு வந்ததாலோ, அனைத்து பரிசுத்தத்தின் தலையூற்றாக கலீஃபா விளங்குவதாலோ அவருக்கு நாம் கட்டுப்படவில்லை. மாறாக, அவர் இறை அறிவிப்பை செயல்படுத்தக் கூடியவராக இருக்கின்றார். மேலும் நிஸாமின் தலையூற்றாக அவர் விளங்குகின்றார். எனவே நாம் கலீஃபாவிற்கு கட்டுப்படுகின்றோம்**

**ஒரு நபருக்கு எல்லா நிலையிலும் கலீஃபாவிற்கு கட்டுப்படுவது கடமையாகும்**

**ஒருவர் பைஅத் செய்யாமல் பைஅத் செய்தவரின் அந்தஸ்தை பெற்று விடலாம் என்று கூறுபவர், பைஅத் என்றால் என்ன? மற்றும் அமைப்பு என்றால் என்ன என்பதையே புரிந்து கொள்ளாதவராகவே இருக்கின்றார் என்பதையே வெளிப்படுத்துகின்றார்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வுமிக்க சஹாபியான ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**ஜமாஅத்தின் நீண்ட கால தொண்டரும், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் உறுப்பினருமான மதிப்பிற்குரிய செய்யத் முஹம்மத் சர்வர் ஷா சாஹிப் அவர்களின் வஃபாத் தொடர்பான அறிவிப்பை ஹுஸூர் அவர்கள் செய்தவாறு அன்னாரது ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 17 ஜனவரி 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **17 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களைப் பற்றிய நற்குறிப்பு கடந்த சில குத்பாக்களில் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. இன்று அதன் இறுதி பகுதியை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்ஸார்கள் தங்கள் சார்பாக யாரை கலீஃபாவாக தேர்ந்தெடுக்க விரும்பினார்களோ அதில் அன்னாரது பெயரும் குறிப்பாக எடுத்துக் கூறப்பட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களும் சீரத் காத்தமன் நபிய்யீனில் எழுதியுள்ளார்கள். அதாவது அன்ஸார் தரப்பிலிருந்து அன்னார் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வலுவாக எடுத்துரைக்கப்பட்டது. அன்னார் இந்த சமுதாயத்தின் தலைவராகவும் விளங்கினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட போது ஹஸ்ரத் சஅத் அவர்கள் சிறிது தடுமாற்றத்திற்கு ஆளானார்கள். இன்னும் சொல்வதென்றால், அன்ஸார்களின் கூற்றுக்களை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப அவர்கள் செயல்பட்டிருக்க வேண்டும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிகவும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் கிலாஃபத்தின் முக்கியத்துவம் மற்றும் அந்தஸ்து தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள். எனவே நான் இதனை எடுத்துக் கூறுவது மிகவும் அவசியமாகும் என்று கருதுகிறேன். மேலும் இது காலத்தின் தேவையாகவும் இருக்கின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்றை எடுத்துக் கூறுவதற்கு முன்பாக ஒரு ஹதீஸ் மற்றும் வரலாற்றிலிருந்து ஓர் ஆதாரத்தை நான் எடுத்துக் கூறுவேன்.

ஹுமைத் பின் அப்துர் ரஹ்மான் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் மதீனாவின் சுற்றுப்புறத்தில் இருந்தார்கள். அவர்கள் வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்திலிருந்த ஆடையை அகற்றி விட்டு அன்னாரது அருளுக்குரிய முகத்தில் முத்தமிட்டார்கள்.

மேலும் கூறினார்கள்: எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. நீங்கள் உயிருடன் இருக்கும் நிலையிலும், மரணித்த நிலையிலும் எவ்வளவு பரிசுத்தமானவர்களாக இருக்கின்றீர்கள்.

மேலும் கூறினார்கள்: கஃபாவின் இறைவன் மீது ஆணையாக! முஹம்மத் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் உமர் ஆகியோர் ஸகீஃபா பனூ சாயிதாவை நோக்கி விரைவாக சென்றார்கள். இவர்கள் அங்கு சென்றடைந்ததும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அங்கு சொற்பொழிவாற்றினார்கள்.

அபூபக்ர் அவர்கள் திருக்குர்ஆனில் அன்ஸார் தொடர்பாக எவையெல்லாம் கூறப்பட்டுள்ளதோ அவை அனைத்தையும் எடுத்துக் கூறினார்கள். எதையும் எடுத்துக் கூறாமல் விட்டுவிடவில்லை. மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள், அன்ஸார்களின் மேன்மைகள் தொடர்பாக எதையெல்லாம் எடுத்துக் கூறியிருந்தார்களோ அவை அனைத்தையும் எடுத்துக் கூறினார்கள்.

பிறகு அன்னார் கூறினார்கள்: உங்களுக்கு தெரியுமா? அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்கள் ஒரு பள்ளத்தாக்கின் வழியாகவும், அன்ஸார்கள் மற்றொரு பள்ளத்தாக்கின் வழியாகவும் சென்றால், நான் அன்ஸார்களின் செல்கின்ற பள்ளத்தாக்கின் வழியிலேயே செல்வேன்.

பிறகு ஹஸ்ரத் சஅத் அவர்களைப் பார்த்து ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் கூறினார்கள்: சஅதே! நீர் அமர்ந்திருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கிலாஃபத்திற்கு உரிமை படைத்தவர்கள் குரைஷிகள் ஆவர். மேலும் மக்களில் நல்லவர்களாக

இருப்பவர்கள் குரைஷிகளின் நல்ல தாக்கத்திற்கு கட்டுப்படுபவர்களாக இருப்பார்கள். மேலும் எவர்கள் கட்டுப்படாதவர்களாக இருப்பார்களோ அவர்கள் குரைஷிகளின் கட்டுப்படாதவர்களுடன் இருப்பர் என்று கூறியது உமக்கு தெரியுமா? என்று கூறினார்கள்.

அதற்கு சஅத் அவர்கள், நீங்கள் உண்மையை கூறினீர்கள். நாங்கள் அமைச்சர்களாக இருக்கின்றோம். நீங்கள் தலைவராக இருக்கின்றீர்கள் என்று கூறினார்கள்.

இந்த ஹதீஸ் முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலில் இடம் பெற்றுள்ளது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 158,159, முஸ்னத் அபீ பக்கர் சித்தீக் ஹதீஸ் எண் 18 – 1994 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

தப்காத்துல் குப்ராவில் இந்த சம்பவத்தைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பினார்கள். அதாவது அவர்கள் வந்து பைஅத் செய்ய வேண்டும். ஏனென்றால், மக்கள் பைஅத் செய்து விட்டனர். உங்களது சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் பைஅத் செய்து விட்டனர் என்று செய்தி அனுப்பினார்கள். அதற்கு அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்னிடமுள்ள ஆதாரங்கள் மூலமாக அனைத்து மக்களையும் செயலிழக்கும்படி செய்கின்ற வரை நான் பைஅத் செய்ய மாட்டேன் என்று கூறினார்கள்.

எனது சமுதாயத்திலிருந்தும் எனது கோத்திரத்திலிருந்தும் எவர்கள் எனக்கு கட்டுப்பட்டு இருக்கின்றார்களோ அவர்களோடு இணைந்து உங்களை எதிர்த்து போர் புரியாத வரையில் நான் பைஅத் செய்ய மாட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்தபோது பிஷீர் பின் சஅத் அவர்கள் கூறினார்கள்: கலீஃபத்துர் ரஸூலே! அவர் மறுத்து விட்டார். அவரை கொலை செய்து விட்டாலும் அவர் உங்களிடம் பைஅத் செய்ய மாட்டார். மேலும் எப்போது வரை அவர்களுடன் அவர்களின் பிள்ளைகளையும், அவர்களின் கோத்திரத்தைச் சார்ந்தவர்களையும் கொலை செய்ய மாட்டோமோ அப்போது வரை அவர்களையும் கொலை செய்யவும் முடியாது. மேலும் கஸ்ரஜ் கோத்திரத்தினரை கொலை செய்யாத வரை இவர்களையும் கொலை செய்ய முடியாது.

மேலும் அவ்ஸ் கோத்திரத்தினரை கொலை செய்யாத வரை கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்களையும் கொலை செய்ய முடியாது. எனவே அவரை விட்டு விடுங்கள். இப்போது மக்களுக்கு விவகாரம் தெளிவாகி விட்டது. அவரால் உங்களுக்கு இழப்பை ஏற்படுத்து முடியாது. அவரது சமுதாயத்தைச் சார்ந்த பெரும்பான்மையினர் பைஅத் செய்து விட்டனர். அவர் மறுத்து விட்டாலும் ஒரு பெரிய விஷயமல்ல. ஏனென்றால் அவர் தனித்து விடப்பட்ட ஒருவராகவே இருக்கின்றார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் பஷீர் அவர்களின் அறிவுரையை எற்றுக் கொண்டவாறு ஹஸ்ரத் சஅத் அவர்களை விட்டு விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் கலீஃபாவாக ஆனபோது ஒரு நாள் மதீனாவில் வழிப்பாதையில் ஹஸ்ரத் சஅத் அவர்களை சந்தித்தார்கள். சஅத் அவர்களிடம் ஹஸ்ரத் உமர் அவர்கள், சஅதே என்று கூறினார்கள். அதற்கு சஅத் அவர்கள், உமரே என்று கூற ஹஸ்ரத் உமர் அவர்கள், நீங்கள் முன்பு இருந்ததைப் போன்றே இப்போதும் இருக்கின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு சஅத் அவர்கள், ஆம்! அப்படியேதான் இருக்கின்றேன். கிலாஃபத் உங்களுக்கு கிடைத்து விட்டது. மக்களில் அதிகமானோர் உங்களிடம் பைஅத் செய்து விட்டனர். ஆனால் நான் இப்போது வரை செய்யவில்லை என்று கூறினார்கள்.

மேலும் சஅத் அவர்கள் கூறினார்கள்: உங்களது நண்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், உங்களை விட எங்களுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவராக இருந்தார்கள். இறைவன் மீது ஆணையாக! நான் உங்களது அண்டை வீட்டுக்காரர்களை விரும்பவில்லை என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், எவர் தனது அண்டை அயலார்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதை விரும்ப மாட்டாரோ பிறகு அவர் அங்கிருந்து வேறு இடத்திற்கு சென்று விட வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு சஅத் அவர்கள், நான் இதை மறக்க மாட்டேன். அதாவது நான் அவ்வாறே செய்வேன். நான் எனது அக்கம் பக்கத்தினரை விட்டு விட்டு வேறு இடத்திற்கு செல்ல இருக்கின்றேன் என்று கூறினார்கள்.

இவ்வாறு ஹஸ்ரத் சஅத் அவர்கள், ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத்தின் ஆரம்ப காலத்திலேயே சிரியாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். தப்காத்துல் குப்ராவில் இந்த ஆதாரம் உள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 சஅத் பின் உபாதா பக்கம் 312 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் பைஅத் செய்த குறிப்பும் காணப்படுகிறது. தப்காத்துல் குப்ராவில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது முழு சமுதாயமும் ஒன்றன் பின் ஒன்றாக ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் பைஅத் செய்தது. மேலும் ஹஸ்ரத் சஅத் அவர்களும் பைஅத் செய்தார்கள். இந்த ஆதாரம் தாரீக் திப்ரியில் இடம் பெற்றுள்ளது.

(தாரீஹ் திப்ரா தொகுதி 3 பக்கம் 266 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் நான் கூறியது போன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வழங்கியுள்ள விளக்கத்திலிருந்த பல்வேறு அம்சங்கள் அதாவது கிலாஃபத்திடம் பைஅத் செய்ய வேண்டிய அவசியம் என்ன? கிலாஃபத்தின் அந்தஸ்து என்ன? மேலும் சஅத் அவர்கள் கூறியதன் முக்கியத்துவம் என்ன? என்பது பற்றி தெரிய வருகின்றது.

அன்னார் தமது ஒரு குத்பாவில் கூறுகின்றார்கள்: கொலை செய்தல் என்பதற்கு தொடர்பை துண்டித்துக் கொள்வது என்ற பொருளும் இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு சஹாபாக்களிடம் கிலாஃபத் தொடர்பாக கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அன்ஸார்கள், கிலாஃபத் நமக்குரிய உரிமையாகும் என்றும் குறைந்தது முஹாஜிரீன்களிலிருந்து ஒரு கலீஃபாவும், அன்ஸார்களிலிருந்து ஒரு

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கிறவர்களுக்கு மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளிக்கின்றான். நம் வசனங்களை மறுத்துப் பொய்யாக்குபவர்கள் நரகிற்குரியவர்களேயாவர். (5:10,11)

Faizal Hameed Ilahi, Tittacherry

கலீஃபாவும் இருக்க வேண்டும் என்றும் எண்ணினர். பனூ ஹாஷிமைச் சார்ந்தவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமது குடும்பத்தைச் சார்ந்தவர்கள். எனவே கிலாஃபத் நமக்குரிய உரிமையாகும் என்று கருதினார்கள்.

ஆனால் முஹாஜிரீன்கள், குரைஷிகளிலிருந்துதான் கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். ஏனென்றால், அரபிகள் குரைஷிகளைத் தவிர வேறு எவரது கூற்றையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் குரைஷிகள் குறிப்பாக எந்தவொரு நபரையும் முன்னிருத்தவில்லை. மாறாக, தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். முஸ்லிம்கள் யாரை தேர்ந்தெடுப்பார்களோ அவரே இறைவன் புறமிருந்து கலீஃபாவாக கருதப்படுவார் என்று விரும்பினர்.

இவர்கள் தமது எண்ணத்தை வெளிப்படுத்தியபோது அன்ஸார்களும், பனூ ஹாஷிமைச் சார்ந்தவர்களும் இவர்களுடைய கருத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனால் ஒரு சஹாபியினால் இதை புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த அன்ஸாரி சஹாபியைத்தான், அன்ஸார்கள் தங்கள் சார்பாக கலீஃபாவாக தேர்ந்தெடுக்க விரும்பினார்கள். எனவே தம்மை இழிவுபடுத்திவிட்டதாக அவர்கள் கருதினார்கள். இந்த விஷயத்தை அவர்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஆக எந்த காரணமாக இருப்பினும் அவர்கள், நான் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் பைஅத் செய்ய தயாராக இல்லை என்று கூறி விட்டார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறிய வார்த்தைகள் சில வரலாற்று நூல்களில் காணப்படுகிறது. அதாவது உமர் அவர்கள் கூறினார்கள்: اُقْتُلُوْا سَعْدًا அதாவது சஅதை கொலை செய்து விடுங்கள். ஆனால் அவர்களும் சுயமே கொலை செய்யவில்லை. வேறு எவரும் கொலை செய்யவும் இல்லை.

மொழிப்புலமை பெற்றவர்களில் சிலர் எழுதுகின்றனர்: அதாவது ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறியதன் நோக்கம் என்னவென்றால், சஅத் அவர்களுடன் தொடர்பை துண்டித்துக் கொள்ளுங்கள் என்பதே ஆகும்.

சில வரலாற்று நூல்களில் இவ்வாறும் எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் சஅத் அவர்கள் தொடர்ச்சியாக பள்ளிவாசலுக்கு வருகை தருவார்கள். தனியாக தொழுது விட்டு திரும்பிச் சென்று விடுவார்கள். எந்தவொரு சஹாபியும் அவருடன் பேச மாட்டார்கள். ஆக கொலை செய்யுங்கள் என்பதன் விளக்கம் என்னவென்றால், தொடர்பை துண்டித்தக் கொள்ளுதல் மற்றும் சமுதாயத்தை விட்டு தனித்து விடுவதும் ஆகும்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 16 பக்கம் 81,82 குத்பா ஜுமுஆ 1 பிப்ரவரி 1935)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சஅத் பின் உபாதா அவர்களின் சம்பவங்களைப் பற்றி விளக்கமாக கூறுகின்றார்கள்: இதற்கு முன்பும் நான் ஒரு குத்பாவில் ஒரு அன்ஸாரி சஹாபியைப் பற்றி எடுத்துக் கூறியிருந்தேன். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அன்ஸார்களிலிருந்துதான் கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சில அன்ஸார்கள் கூறினர். ஆனால் முஹாஜிரீன்களில் குறிப்பாக ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் சஹாபாக்களிடம், இவ்வாறு தேர்ந்தெடுப்பது ஒருபோதும் இஸ்லாமிய சமுதாயத்திற்கு பயன் தரக்கூடியதாக அமையாது. ஏனென்றால் முஸ்லிம்கள் (அன்ஸார்களிலிருந்து மட்டும் தேர்ந்தெடுப்பதை) ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று கூறினார்கள். எனவே அன்ஸார்களும், முஹாஜிரீன்களும், முஹாஜிரீன்களிலிருந்தே ஒருவரது கையில் பைஅத் செய்வோம் என்ற விஷயத்தில் ஒன்றுபட்டனர். இறுதியில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை தேர்ந்தெடுப்பதில் அனைவரும் ஒன்றுபட்ட கருத்திற்கு வந்தனர்.

அன்ஸார்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவது பயனுள்ளதாக அமையாது என்று அன்ஸார்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களும், சஹாபாக்களும் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். எனவே முஹாஜிரீன்களிலிருந்தே கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அனைவரும் கலீஃபாவாக தேர்ந்தெடுத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த சமயத்தில் ஹஸ்ரத் சஅத் அவர்கள் பைஅத் செய்யாமல் பின்தங்கி விட்டார்கள். எனவே ஹஸ்ரத் உமர் அவர்கள், اُقْتُلُوْا سَعْدًا அதாவது சஅதை கொலை செய்யுங்கள் என்று கூறினார்கள். ஆனால் உமர் அவர்கள் சஅதை கொலை செய்யவுமில்லை. வேறு எந்த சஹாபியும் கொலை செய்யவில்லை. மாறாக, சஅத் அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் வரை உயிருடன் இருந்தார்கள். மேலும் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் சிரியாவில் சஅத் அவர்கள் மரணமடைந்தார்கள். அதாவது அவர்கள் ஹிஜ்ரத் செய்து சிரியா சென்றார்கள். அங்கு வஃபாத்தானார்கள்.

கடந்த கால இமாம்களின் கருத்தும் இதுவே ஆகும். அதாவது 'கதல்' கொலை செய்தல் என்பதற்கு இந்த இடத்தில் பௌதீக ரீதியாக கொலை செய்தல் என்பதல்ல. மாறாக, தொடர்பை துண்டித்துக் கொள்ளுதல் என்பதே பொருளாகும். அரபி மொழியில் கதல் என்பதற்கு பல பொருட்கள் இருக்கின்றது. உருது மொழியில் கதல் என்பதற்கு கொலை செய்தல் என்ற பொருள்தான். ஆனால் அரபி மொழியில் கதல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டால் அது பல அர்த்தங்களை, பொருட்களை தரக்கூடியதாக இருக்கின்றது. அதில் ஒரு பொருள்தான், தொடர்பை துண்டித்தக் கொள்ளுதல் ஆகும்.

அகராதியின் அடிப்படையில் ஹஸ்ரத் உமர் அவர்களின் கூற்றிற்கேற்ப கதல் அதாவது கொலை செய்யுங்கள் என்ற கூற்றிற்கு கொலை செய்தல் என்ற பொருள் கிடையாது. மாறாக, தொடர்பை துண்டித்துக் கொள்ளுதல், தனித்து விட்டு விடுவது, அவருடன் பேசுவதை நிறுத்திக் கொள்வது என்பதேயாகும்.

கொலை செய்வது என்பது வெளிப்படையாகவே கொலை செய்வதுதான் என்றால் பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் மிகவும் ரோஷமிக்கவராக இருந்தும் ஏன் அவர்களே கொலை செய்யவில்லை? அல்லது சஹாபாக்களில் எவரும் ஏன் அவர்களை கொலை செய்யவில்லை? மாறாக, ஹஸ்ரத் உமர் அவர்கள் சஅத் அவர்களை கொலை மட்டும் செய்யவில்லை. இன்னும் சொல்வதென்றால், தமது கிலாஃபத் காலகட்டத்திலும் கூட சஅத் அவர்களை கொலை செய்யவில்லை.

சிலர், சஅத் அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்திற்குப் பிறகும் உயிருடன் இருந்தார்கள் என்று கூறுகின்றனர். எந்தவொரு சஹாபியும் அவர்களை அடித்தது கூட கிடையாது.

## திருக்குர்ஆனிலிருந்து...

இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமை செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக, இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன். (5:4)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

ஆக இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், கதல் என்பதன் பொருள் தொடர்பை துண்டித்துக் கொள்ளுதல் என்பதேயாகும். பொருளாகும். வெளிப்படையாக கொலை செய்வது கிடையாது. சஹாபாக்கள் ஹஸ்ரத் சஅத் அவர்களை விட்டும் தனித்து பிரிந்து விட்டார்கள். இருப்பினும் எவரும் அவர்கள் மீது கையை ஓங்கியது கிடையாது.

ஹஸ்ருத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒரு உதாரணத்தை கூறினேன். அதாவது கனவிலும் ஒருவர் கொலை செய்யப்படுவதைக் கண்டால் அதன் பொருள் தொடர்பை துண்டித்தல் அல்லது பாய்காட் செய்யப்படுதல் என்பதே ஆகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனது இந்த குத்பாவிற்கு பிறகு என்னிடம் ஒரு நண்பர் கூறினார். சஅத் அவர்கள் பைஅத் செய்யவில்லை. ஆனால் ஆலோசனை வழங்குவது அல்லது கேட்பதில் அவரை கண்டிப்பாக சேர்த்துக் கொண்டார்கள். அதாவது பைஅத் செய்யாமல் இருந்திருந்தும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அவர்களை ஆலோசனையில் கலந்து கொள்ளச் செய்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த நபர் ஹஸ்ரத் சஅத் அவர்கள் தொடர்பாக கூறிய விஷயத்தில் இரண்டு அர்த்தங்கள் இருக்கலாம். ஒன்று, அவர் எனது கருத்தை மறுக்கின்றார். அல்லது இத்தகைய சம்பவமே நடைபெறவில்லை. அதாவது அவர் கூற விரும்புவது, கிலாஃபத்திடம் பைஅத் செய்யாமல் இருப்பது மிகப்பெரிய பாவம் ஒன்றுமல்ல. ஏனென்றால் சஅத் அவர்கள் பைஅத் செய்யாமல் இருந்திருந்தும் கலந்தாலோசனைகளில் அவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள் என்பதேயாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு கவிஞர் கூறினார்:

تَا مَرْد سُخَن نَگُفْتَه بَاشَد      عَيْب وہُنْرَش نَہفْتَه بَاشَد

மனிதன் குறைகளும், அவனது திறமைகளும் அவன் உரையாடும் வரைதான் மறைமுகமாக இருக்கின்றது. மனிதன் உரையாடும்போது பல முறை அவனது குறைகளை அவன் குறைகளை வெளிப்படுத்தி விடுகின்றான். அதாவது மௌனமாக இருக்கும்போது அவனது குறைகள் மறைந்து இருக்கின்றன. சில சமயங்களில் முட்டாள்தனமாக பேசும்போது அவனது குறைகள் வெளிப்பட்டு விடுகிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: எந்த நபர் ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஆலோசனையில் கலந்து கொண்டார்கள் என்று கூறி புகழ்ந்து பேசினாரோ அந்த நபரது கூற்றும் இந்த பொருளையே கொண்டுள்ளது. அதாவது அவர் கிலாஃபத்திடம் பைஅத் செய்வதிலிருந்து பின்தங்கி விட விரும்புகின்றார் அல்லது தனது அறிவை அவர் வெளிப்படுத்திக் காட்ட விரும்புகின்றார். ஆனால் இந்த இரண்டு விஷயங்கள் தவறாகும். அறிவை வெளிப்படுத்துவதனால் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால், இவரது கூற்று எந்த அளவுக்கு தவறு என்றால் அறிவுள்ள ஒவ்வொருவரும் இவரது கூற்றைக் கேட்டு சிரிக்கவே செய்வார்.

சஹாபாக்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக இஸ்லாமிய வரலாற்றில் மூன்று நூல்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை ஆகும். மேலும் சஹாபாக்கள் தொடர்பான அனைத்து வரலாறுகளும் இந்த நூல்களில் காணப்படுகின்றது. அந்த நூல்கள் இவையாகும்: தஹ்ஸீபுத் தஹ்ஸீப், அஸாபா, அஸதுல் காபா ஆகியவை.

இந்த மூன்று நூல்களிலும் இதுவே எழுதப்பட்டுள்ளது. அதாவது சஅத் அவர்கள் மற்ற சஹாபாக்களை விட்டு விட்டு சிரியாவிற்கு சென்று விட்டார்கள். மேலும் அங்கேயே மரணமடைந்தார்கள். சில அகராதி நூல்கள் கதல் என்ற சொல்லை விவாதித்தவாறு இந்த சம்பவத்தை பற்றி எடுத்துக் கூறியுள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் கூறுகின்றார்கள்: சஹாபாக்களில் 60, 70 நபர்களின் பெயர்கள் சஅத் ஆகும். அவர்களில் ஒருவர் சஅத் பின் அபீ வகாஸ் ஆகும். இந்த சஹாபி நபி (ஸல்) அவர்கள் சுவர்க்கவாசி என்று குறிப்பிட்ட 10 நபர்களில் ஒருவர் ஆவார். ஹஸ்ரத் உமர் அவர்கள் சார்பாக படையின் தலைவராகவும் இருந்தார்கள். மேலும் அனைத்து ஆலோசனை கூட்டங்களிலும் கலந்து கொண்டுள்ளார்கள்.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், எந்த நபர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்களின் குத்பாவிலிருந்து தமது குறைமதியை வெளிப்படுத்தியவாறு சஅத் என்ற சொல்லை கேட்டு விட்டு இந்த சஅத் வேறொருவர் என்றும் அந்த சஅத் வேறொருவர் என்றும் புரிந்து கொள்ளாமல் குற்றம்சாட்டினாரோ அவர் சரியாக புரிந்து கொள்ளவில்லை.

நான் முஹாஜிரீன்களைச் சார்ந்த சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களைப் பற்றி எடுத்தக் கூறவில்லை. மாறாக, நான் எடுத்துக் கூறியவர் அன்ஸார்களைச் சார்ந்தவர் ஆவார். ஆக இந்த இரண்டு சஅத் மட்டுமின்றி ஏராளமான சஅத் இருக்கின்றார்கள். இன்னும் சொல்வதென்றால், 60, 70 சஅத் இருக்கின்றனர். எந்த சஅத் தொடர்பாக நான் எடுத்துக் கூறினேனோ அவர்களது பெயர் சஅத் பின் உபாதா ஆவார்கள்.

பொதுவாக ஒவ்வொரு ஊரிலும் ஒரே பெயரைக் கொண்ட பல நபர்கள் இருக்கின்றனர். எவரைப் பற்றியாவது கூற வேண்டுமென்றால் பிறகு அவரது தந்தையின் பெயருடன் அவரைப் பற்றி குறிப்பிடுவர். உதாரணமாக, சஅத் என்ற பெயரில் சஅத் பின் உபாதா அல்லது சஅத் பின் அபீ வக்காஸ் என்று கூறுவார்கள்.

மேலும் தந்தையின் பெயரால் அடையாளங்கண்டு கொள்ள முடியாத நிலையில் அவரது அந்தஸ்தைப் பற்றி குறிப்பிடுவர். அவரது அந்தஸ்தைப் பற்றி குறிப்பிட்டும் அடையாளங்கண்டு கொள்ள முடியாத நிலையில் அவரது கோத்திரத்தைப் பற்றி கூறுவர். ஆக சஅத் அவர்கள் தொடர்பாக வரலாற்றில் அதிகமாக விவாதம் நடைபெற்றுள்ளது. ஏனென்றால் இவர்களது பெயர் மற்றவர்களுடன் ஒன்றுபட்டு காணப்படுகிறது.

வரலாற்றாசிரியர்கள் இவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு எழுதுகின்றார்கள்: உதாரணமாக, இந்த சஅத் தான் கஸ்ரஜ் கோத்திரத்தின் சஅத் ஆவார்.

ஆக ஆட்சேபனை செய்தவர் அல்லது கருத்து தெரிவித்தவர் பெயர்களிலுள்ள கருத்து வேறுபாட்டை அவர் புரிந்து கொள்ளாமலேயே ஆட்சேபனை செய்து விட்டார். அவரது இந்த கூற்று அவரது அறிவை அதிகப்படுத்திக் காட்டுவதாக இருப்பதில்லை. மாறாக, அவரது அறியாமையை வெளிப்படுத்திக் காட்டக்கூடியதாக இருக்கின்றது.

## திருக்குர்ஆனிலிருந்து...

உங்களுக்கு அல்லாஹ் செய்த அருளையும், அவனது உடன்படிக்கையையும் நினைத்துப் பாருங்கள். உங்களுடன் அவன் செய்த அந்த உடன்படிக்கையின்போது நாங்கள் செவியேற்றோம்; கட்டுப்பட்டோம் என்று நீங்கள் கூறினீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக உள்ளங்களிலுள்ளவற்றை அல்லாஹ் நன்கறிகின்றான். (5:8)

A.Basheer Ahmad, Melapalayam

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: கிலாஃபத் எத்தகைய ஒரு விஷயம் என்றால் இதனை விட்டு பிரிந்து செல்வது மனிதனை எந்தவொரு கண்ணியத்திற்கும் உரியவனாக ஆக்காது.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டுள்ளேன். அதாவது கலீஃபாவிற்கு முதன்மையான எதிரி யார் என்று தெரியுமா? என்று கூறியவாறு அவர்களே அதற்கு இவ்வாறு பதிலளித்தார்கள். அதாவது திருக்குர்ஆனை படியுங்கள். இப்லீஸ் அவரது எதிரியாவான் என்பது உங்களுக்குத் தெரிய வரும். அதற்குப் பிறகு அதாவது ஆதம் அவர்களை அல்லாஹ் கலீஃபாவாக தேர்ந்தெடுத்தான். அவர்களது எதிரியும் இப்லீஸாகவே இருந்தான். அதற்குப் பிறகு அன்னார் கூறினார்கள்: நானும் கலீஃபாவாக இருக்கின்றேன். எவர் எனக்கு எதிரியாக இருப்பாரே அவரும் இப்லீஸே ஆவார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வித சந்தேகமுமின்றி கலீஃபா இறைவன் புறமிருந்து நேரடியாக நியமிக்கப்பட்டவராக இருப்பதில்லைதான். மேலும் அவர் அனுப்பப்பட்டவராக இல்லாமல் இருப்பதும் அவசியமல்ல. ஹஸ்ரத் ஆதம் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவராகவும் இருந்தார்கள். கலீஃபாவாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் தாவூத் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவராகவும் இருந்தார்கள்.

கலீஃபாவாகவும் இருந்தார்கள். அதேபோன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். கலீஃபாவாகவும் இருந்தார்கள். பிறகு அனைத்து நபிமார்களும் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர்களாகவும் இருக்கின்றார்கள். மேலும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீஃபாவாகவும் இருக்கின்றார்கள். எவ்வாறு ஒவ்வொரு மனிதனும் ஒரு வகையில் கலீஃபாவாக இருக்கின்றானோ அதேபோன்று நபிமார்களும் கலீஃபாவாக இருக்கின்றார்கள்.

ஆனால் சில கலீஃபாக்கள் இறைவன் புறமிருந்து அனுப்பப்படாதவர்களாக இருக்கின்றனர். ஆனால் கட்டுப்படுதலின் அடிப்படையில் அவர்களுக்கும் நபிமார்களுக்கும் எந்த வேறுபாடும் இருப்பதில்லை. நபிக்கு கட்டுப்படுவது எவ்வாறு அவசியமோ அவ்வாறே கலீஃபாவிற்கு கட்டுப்படுவதும் அவசியமாகும்.

ஆம்! இந்த இருவருக்கும் கட்டுப்படுவதில் ஒரு மேன்மையும், வேறுபாடும் இருக்கின்றது. அது என்னவென்றால், நபி இறைவன் புறமிருந்து இறை அறிவிப்பை கொண்டு வருபவராக இருக்கின்றார். மேலும் அனைத்து பரிசுத்தத்தின் தலையூற்றாகவும் அவர் விளங்குகின்றார் என்ற காரணத்தினால் நபிக்கு கட்டுப்படுகின்றோம்.

ஆனால் இறை அறிவிப்பை கொண்டு வந்ததாலோ, அனைத்து பரிசுத்தத்தின் தலையூற்றாக கலீஃபா விளங்குவதாலோ அவருக்கு நாம் கட்டுப்படவில்லை. மாறாக, அவர் இறை அறிவிப்பை செயல்படுத்தக் கூடியவராக இருக்கின்றார். மேலும் நிஸாமின் தலையூற்றாக அவர் விளங்குகின்றார். எனவே நாம் கலீஃபாவிற்கு கட்டுப்படுகின்றோம். அதாவது நபியின் மீது அருளப்பட்டதை கலீஃபா நடைமுறைப்படுத்தக் கூடியவராக இருக்கின்றார். எந்த அமைப்பை நபி நிறுவினாரோ அதனை வழிநடத்தக் கூடியவர் கலீஃபாவாக இருக்கின்றார்.

எனவே ஞானமிக்கவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்: அதாவது நபிமார்களுக்கு பெரிய களங்கமற்ற நிலையிலுள்ள அந்தஸ்து வழங்கப்படுகிறது. கலீஃபாக்களுக்கு சிறிய களங்கமற்ற நிலையிலுள்ள அந்தஸ்து வழங்கப்படுகிறது. முதலாவது கலீஃபா அவர்கள் கூறியதை செவியுற்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் இந்த பள்ளியில் இந்த மிம்பரில் முதலாவது கலீஃபா ஜுமுஆ நாளன்று கூறியதை கேட்டேன். அன்னார் கூறினார்கள்: நீங்கள் எனது தனிப்பட்ட செயல்களிலுள்ள குறைகளைக் கண்டு கட்டுப்படுதலின் வட்டத்திலிருந்து வெளியேறி விட முடியாது. ஏதாவது எனது தனிப்பட்ட பணிகளில் நீங்கள் குறைகளை கண்டு பிடித்தால் அதன் பொருள் நீங்கள் கட்டுப்படுதலின் வட்டத்திலிருந்து வெளியேறி விடலாம் என்பதல்ல. அவ்வாறு ஒருபோதும் வெளியேற முடியாது. எந்த கட்டுப்படுதலை இறைவன் உங்கள் மீது சுமத்தியுள்ளானோ அதிலிருந்து நீங்கள் வெளியேற முடியாது. ஏனென்றால் நான் எந்த பணிக்கான நியமிக்கப்பட்டுள்ளேனோ அது நிஸாமின் ஒற்றுமையாகும். எனவே எனக்கு கட்டுப்படுவது அவசியமாகும்.

நபிமார்கள் தொடர்பாக இங்கு இறைவனது நடைமுறை என்னவென்றால், அவர்களின் மனித பலவீனங்களில், அவை ஏகத்துவம் மற்றும் நபித்துவம் ஆகியவற்றிற்கிடையிலுள்ள வித்தியாசத்தை தெளிவுபடுத்துவதற்காக இருப்பதால் அவற்றில் அல்லாஹ் தலையிடுவதில்லை. மேலும் அது சமுதாயத்தின் தர்பிய்யத்திற்கும் மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கின்றது.

உதாரணமாக, மறதி சஜ்தா என்பது நபிமார்கள் மறதியின் காரணமாக செய்யக்கூடிய ஒன்றாகும். ஆனால் இதன் இன்னொரு நோக்கம் சமுதாயத்திற்கு மறதி ஏற்பட்டால் பேண வேண்டி இறை கட்டளைகளை பற்றி தெரிவிப்பதும் ஆகும். இத்தகைய தவறுகள் நபிமார்கள் தரப்பிலிருந்தும் நிகழ்ந்து விடுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மறதி சஜ்தா செய்துள்ளார்கள். அதாவது நபிமார்களின் அனைத்து செயல்களும் இறைவனது பாதுகாப்பில் இருக்கின்றது.

பிறகு அன்னார் கூறினார்கள்: கலீஃபாக்கள் தொடர்பாக இறைவனது நடைமுறை இதுவாகும். அவர்களது அனைத்து செயல்களும் இறைவனது பாதுகாப்பில் இருக்கும். அது இறை அமைப்பின் முன்னேற்றத்திற்காக அவர்கள் மூலம் வெளிப்படும். மேலும் அவர்கள் மூலமாக ஒருபோதும் இவ்வாறான தவறுகள் நிகழாது. அதாவது ஜமாஅத்தில் குறைகள் ஏற்படக்கூடிய மற்றும் இஸ்லாத்தின் வெற்றியை தோல்வியாக மாற்றச் செய்யும் வகையில் அவர்கள் மூலமாக தவறுகள் நிகழாது. அவ்வாறு அவர்கள் தவறுகள் செய்தாலும் அதில் அவர்கள் நிலைத்திருக்க மாட்டார்கள்.

மேலும் காலத்தின் கலீஃபா அமைப்பை வலுப்படுத்துவதற்காகவும், இஸ்லாத்தின் மேன்மைக்காகவும் எந்தப் பணிகளை செய்தாலும் இறைவனது பாதுகாப்பு அவர்களுடன் இருக்கும். அவர்கள் தவறுகள் செய்தாலும் இறைவனே அதை சீர்

## திருக்குர்ஆனிலிருந்து...

தானாகச் செத்ததும், இரத்தமும், பன்றி இறைச்சியும், அல்லாஹ் அல்லாத (வேறொருவரின் அல்லது வேறொன்றின்) பெயர் கூறப்பட்டதும், கழுத்து நெருங்கிச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும், (உயரத்திலிருந்து) விழுந்து செத்ததும், கொம்பால் குத்தப்பட்டுச் செத்ததும், காட்டு விலங்கு தின்றவற்றில் (சாவதற்கு முன்னர்) நீங்கள் முறைப்படி அறுத்து விட்டதைத் தவிர உள்ளதும், (சிலையின்) பலிபீடத்தில் அறுக்கப்பட்டதும் உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளன. (5:4)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

ஆக அமைப்பு தொடர்பாக கலீஃபாக்களின் செயல்களுக்கு பொறுப்பாளி கலீஃபா கிடையாது. மாறாக, இறைவன் ஆவான். எனவேதான் கலீஃபாவை அல்லாஹ் ஏற்படுத்துகின்றான் என்று கூறப்படுகிறது.

கலீஃபாக்கள் தவறுகள் செய்ய மாட்டார்கள் என்பது இதன் பொருள் அல்ல. மாறாக, அவர்களது கூற்றுக்கள் மூலமாக அல்லது செயல்கள் மூலமாக இறைவன் அந்த தவறை சீர் செய்து விடுவான். அல்லது அவர்களின் கூற்றுக்கள் அல்லது செயல்களின் மூலம் தவறை சீர் செய்யவில்லை என்றால் பிறகு அந்த தவறினால் ஏற்படக்கூடிய தீய விளைவை அல்லாஹ் மாற்றி விடுவான். அதாவது அதன் விளைவுகள் தீயதாக இருக்காது.

அன்னார் கூறுகின்றார்கள்: கலீஃபாக்கள் எப்போதாவது ஏதாவதொரு செயலை செய்து அதனால் வெளிப்படையாக முஸ்லிம்களுக்கு தீமை ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டால், மேலும் அதன் காரணமாக ஜமாஅத் முன்னேற்றத்திற்கு பகரமாக வீழ்ச்சியின் பக்கம் செல்லவதற்கான வெளிப்படையான அபாயம் தென்பட்டாலும் அல்லாஹ் மிகவும் மறைவான காரணிகளின் மூலமாக அந்த தவறின் தீய விளைவுகளை மாற்றி விடுவான்.மேலும் ஜமாஅத் வீழ்ச்சியின் பக்கம் செல்வதற்கு பகரமாக முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்கும். மேலும் அந்த மறைவான ஞானமும் நிறைவேறி விடும். அதாவது கலீஃபாவிற்கு ஏற்பட்ட மறதி அல்லது கவனக்குறைவு ஆகியவற்றை அவன் நீக்கி விடுவான்.

ஆனால் நபிமார்களுக்கு இந்த இரண்டு விஷயங்களும் கிடைத்திருக்கின்றன. அதாவது நபிமார்களுக்கு பெரிய களங்கமற்ற நிலையிலுள்ள அந்தஸ்து வழங்கப்படுகிறது. சிறிய களங்கமற்ற நிலையிலுள்ள அந்தஸ்து வழங்கப்படுகிறது. அதாவது அவர்கள் இறை அறிவிப்பு மற்றும் பரிசுத்தத்தின் தலையூற்றாகவும் இருக்கின்றார்கள். அதனை நடைமுறைப்படுத்தக் கூடியவர்களாகவும், அமைப்பை வழிநடத்தக் கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள்.

மேலும் ஒவ்வொரு கலீஃபாவும் சில நற்செயல்களை செய்வதில் மற்ற அவ்லியாக்களை விட குறைவானவர்களாக இருக்கலாம். ஆனால் நிர்வாகத் திறமையின் அடிப்படையில் அவர்கள் மற்றவர்களை விட மேன்மையானவர்களாக இருக்கின்றார்கள். எவ்வாறிருப்பினும், எல்லா நிலையிலும் கலீஃபாவிற்கு கட்டுப்படுவது கடமையாகும்.

ஜமாஅத் அமைப்பிற்கு ஓர் எல்லைக்குட்பட்ட நிலையில் ஜமாஅத் அரசியலுடனும் தொடர்பு இருக்கின்றது. ஜமாஅத்தின் அரசியல் என்று கூறியதால் மக்கள் இப்போது வியப்பிற்குள்ளாகி இருக்கலாம். சிலருக்கு ஜமாஅத்தின் அரசியல் என்றால் என்ன? என்று கூற எண்ணம் வந்திருக்கலாம். இங்கு அரசியல் என்பது நேர்மறையான பொருளிலேயே பயன்படுத்தப்படுகிறது. சில அரசியல்வாதிகள் இந்த சொல்லை அவமரியாதை செய்துள்ளனர். அதாவது இழப்பை ஏற்படுத்துவது அல்லது சரியான பணிகளை செய்யாமல் இருப்பது போன்றவற்றிற்காக பயன்படுத்துகின்றனர். ஆனால் உண்மையில் அகராதியில் இதன் பொருள் என்னவென்றால், அமைப்பை வழிநடத்தக்கூடிய வழிமுறை என்பதே ஆகும்.

சரியான முறையில் அமைப்பை வழிநடத்துவதைத்தான் அரசியல் என்று கூறுகின்றனர். பிறகு நுட்பமான முறையில் பணிகளை செய்வதும் இதற்கு பொருள்படும். அரசியல் என்பதற்கு, தீமைகளை தடுப்பதற்காக அமைப்பை நிறுவுவது என்றும் பொருள்படும். ஆக அனைத்து நல்ல விஷயங்களுக்காகவும் இந்த சொல் பயன்படுத்தப்படும். ஆனால் நான் கூறியதுபோன்று, துரதிர்ஷ்டவசமாக நாம் உண்மையான பொருளை மறந்து விட்டு அரசியல்வாதிகளின் செயல்பாடுகளின் காரணமாக மேலும் நமது தவறான செயல்பாடுகளின் காரணமாக இதற்கு தவறான பொருளை தருகின்றோம். ஆனால் எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் இந்த சொல்லை பயன்படுத்தியுள்ளார்கள். அரசியல் என்ற வார்த்தையை நல்ல கோணத்தில் அவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். நான் கூறிய அந்த அனைத்து விஷயங்களும் அதாவது அமைப்பை வழிநடத்துவதற்கான ஞானமும் நுட்பமும், ஆளுமையும் இருக்க வேண்டும். இதுதான் அரசியல் என்பதன் பொருளாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: அமைப்பிற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வரை ஜமாஅத் அரசியலுடன் தொடர்பு இருக்கின்றது. எனவே கலீஃபா தொடர்பாக, அவர் அமைப்பை சிறந்ததாக ஆக்கக் கூடியவராகவும், நிஸாமை எல்லாவற்றையும் விட மேலோங்கச் செய்பவராகவும் இருப்பாரா என்ற அம்சமே பார்க்கப்படுகின்றது. அத்துடன் அதாவது இங்கு அன்னார் இதன் விளக்கத்தையும் கூறி விட்டார்கள். அதாவது அவர் மார்க்கத்தின் வலிமைக்காகவும், அது நிறுவப்பட்டதன் நோக்கத்தையும் கண் முன் நிறுத்த வேண்டும். இவை அவசியமாகும்.

காலத்தின் கலீஃபா ஜமாஅத் அமைப்பை வழிநடத்துவதும் அவசியமாகும். அத்துடன் மார்க்கத்தின் வலிமைக்காகவும், அதனை நிலைநிறுத்துவதையும் கண்முன் நிறுத்துவது அவசியமாகும். எனவேதான் திருக்குர்ஆனில் அல்லாஹ் கிலாஃபத் தொடர்பாக கூறும்போது, வலயுமக்கினன்ன லஹும் தீனஹுமுல்லதிர் தழா லஹும் என்று கூறுகின்றான்.

அதாவது இறைவன் அவர்களது மார்க்கத்தை வலிமைப்படுத்துவான். மேலும் உலகத்தில் வெற்றியை வழங்குவான். ஆக எந்த மார்க்கத்தை கலீஃபா எடுத்துரைப்பாரோ அது இறைவனது பாதுகாப்பில் இருக்கின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: சில அம்சங்களில் அவர்கள் தவறிழைக்கலாம். மேலும் கலீஃபாக்களுக்கிடையே கருத்து வேறுபாடுகளும் ஏற்படலாம். ஆனால் அது மிகவும் சாதாரண ஒன்றாகவே இருக்கும். உதாரணமாக, சில விவகாரம் தொடர்பாக ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் அவர்களுடன் கருத்து வேறுபாடு இருந்துள்ளது. மாறாக, இன்று வரை முஹம்மதிய்ய சமுதாயம் இந்த விவகாரம் தொடர்பாக ஒரு கொள்கையை எடுக்க முடியவில்லை. ஆனால் இந்த கருத்து வேறுபாடு சில அம்சங்களில் இருக்கின்றது. அடிப்படையான விவகாரங்களில் இவர்களிடையே ஒருபோதும் கருத்து வேறுபாடு ஏற்படாது. மாறாக, அதற்கு மாற்றமாக அவர்களிடம் ஒற்றுமை இருக்கும். அதாவது கலீஃபாக்கள் உலகத்தின் வழிகாட்டியாகவும், தலைவராகவும், ஒளியை பரப்பக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை, உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (5:9)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

ஆக ஒருவர் பைஅத் செய்யாமல் பைஅத் செய்தவரின் அந்தஸ்தை பெற்று விடலாம் என்று கூறுபவர், பைஅத் என்றால் என்ன? மற்றும் அமைப்பு என்றால் என்ன என்பதையே புரிந்து கொள்ளாதவராகவே இருக்கின்றார் என்பதையே வெளிப்படுத்துகின்றார்.

ஆலோசனை தொடர்பாக இதனையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது மாற்று மதத்தைச் சார்ந்தவர்களிடமும் கூட அவர் புலமை பெற்றவராக இருந்தால் அவரிடம் ஆலோசனை பெறலாம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு வழக்கில் ஓர் ஆங்கிலேயே வக்கீலை நியமித்தார்கள். ஆனால் இதன் மூலம் அன்னார் அவரிடம் நபித்துவம் தொடர்பான விஷயங்களில் ஆலோசனை பெற்றார்கள் என்பது பொருளல்ல.

அஹ்ஸாப் போர் நடைபெற்றது. அப்போது நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சல்மான் ஃபாரிஸி (ரலி) அவர்களிடம் ஆலோசனை பெற்றார்கள். மேலும் கூறினார்கள்: உங்களது நாட்டில் போரின் சந்தர்ப்பத்தில் என்ன செய்யப்படுகின்றது? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், எங்கள் நாட்டில் அகழ் தோண்டப்படுகிறது என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், இது மிகவும் நல்ல ஆலோசனையாகும் என்று கூறி அகழ் தோண்டச் செய்தார்கள். எனவே தான் இதனை அகழ் போர் என்று அழைக்கின்றோம்.

இருப்பினும், சல்மான் ஃபாரிஸி அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை விட போரில் புலமை பெற்றவர்கள் என்று நம்மால் கூற முடியாது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இருந்த போர் தந்திரம், புலமை சல்மான் பாரிஸி அவர்களிடம் இல்லாமல் இருந்தது. அல்லது பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய பணிகளை செய்துள்ளார்களோ அவ்வாறான பணியை ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி அவர்கள் எப்போது செய்தார்கள்? மாறாக, கலீஃபாக்களின் காலகட்டத்திலும் கூட அவர்கள் ஒரு படையின் தலைவராக நியமிக்கப்படவில்லை. இருப்பினும் அவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றார்கள். ஆக மாற்று மதத்தைச் சார்ந்த புலமை பெற்றவர்களிடம் ஆலோசனை பெறலாம்.

பிறகு அன்னார் தம்மைப் பற்றி கூறுகின்றார்கள்: நான் நோயுற்றிருந்தேன். ஆங்கிலேயே மருத்துவர்களிடமிருந்து சில ஆலோசனைகளை பெற்றுக் கொள்கின்றேன். ஆனால் இதன் பொருள், கிலாஃபத்திலும் அவர்களிடம் ஆலோசனை பெற்றேன். அல்லது ஆலோசனை பெறுகிறேன் என்பதல்ல. அல்லது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்களின் அந்தஸ்தில் அவர்கள் இருப்பதாக கருதுகிறேன் என்பதல்ல. சஹாபாக்களிடமும் நான் ஆலோசனை பெறுகின்றேன். இதன் பொருள், அந்நியர்களுடன் ஆலோசனை பெறுவது மற்றும் சஹாபாக்களிடம் ஆலோசனை பெறுவது ஒன்றே என்பது பொருளல்ல. சஹாபாக்களின் அந்தஸ்து எந்நிலையிலும் உயர்வானதே ஆகும்.

ஆக இதன் பொருள், நான் ஒரு மருத்துவரிடம் ஆலோசனை பெற்றேன். அவ்வளவுதான். ஒரு குறிப்பான துறையினரிடம் ஆலோசனை பெற்றேன். ஏதாவதொரு குறிப்பான விஷயத்திற்காக ஆலோசனை பெற்றேன். அவ்வளவுதான்.

ஆக சஅத் பின் உபாதா அவர்கள் ஏதாவது உலக விஷயங்களில் அவர்கள் புலமை பெற்றிருக்கலாம் அதில் அவர்களிடம் ஆலோசனை பெற்றிருப்பதாக நிரூபணமானாலும் அவர்கள் ஆலோசனையில் கலந்து கொண்டார்கள் என்று நம்மால் கூற முடியாது. இவர்கள் தொடர்பாக, அன்னார் ஆலோசனை கூட்டத்தில் பங்கு பெற்றிருந்தார்கள் என்ற சரியான அறிவிப்பும் கிடைக்கவில்லை. மாறாக, பொதுவாக இந்த அறிவிப்பே வருகிறது.

அதாவது அவர்கள் மதீனாவை விட்டு விட்டு சிரியாவிற்கு சென்று விட்டார்கள். மேலும் சஹாபாக்கள், சஅத் அவர்கள் இஸ்லாமிய தலைமையகத்துடன் தொடர்பை துண்டித்துக் கொண்டார் என்ற கருத்தையே கொண்டிருந்தனர். எனவே அவர்களது வஃபாத்தின் சந்தர்ப்பத்தில் சஹாபாக்கள் இவ்வாறு கூறியதாக வருகிறது. அதாவது வானவர்கள் அல்லது ஜின்கள் அவரை கொன்று விட்டார்கள்.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், சஹாபாக்கள் அவரது மரணத்தைக் கூட நல்லதாக எண்ணவில்லை. ஏனென்றால் ஒவ்வொருவரையும் வானவர்தான் கொலை செய்கின்றார். இவர்களது மரணத்தின்போது குறிப்பாக இவரை வானவரோ அல்லது ஜின்னோ கொன்று விட்டார் என்று கூறுவதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், சஹாபாக்களின் பார்வையில் அவர்களது மரணமும் இறைவனது குறிப்பான திட்டத்திற்கேற்பவே நிகழ்ந்தது. அதாவது அவர்கள் எதிர்ப்புக்கு காரணமாக அமைந்து விடக்கூடாது என்பதற்காகவே இறைவனது குறிப்பான திட்டத்திற்கேற்ப அவரது மரணம் நிகழ்ந்தது என்று சஹாபாக்கள் கருதுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபி ஆவார்கள். எந்தவொரு நயவஞ்சகத்தனமோ அல்லது எதிர்ப்போ அல்லது வேறு ஏதாவது விஷயத்திற்கு அவர்கள் காரணமாகி விடக்கூடாது. அதன் மூலமாக அவர்களது அந்தஸ்து குறைந்து விடக்கூடாது. எவ்வாறிருப்பினும் அவர்கள் விலகிச் சென்று விட்டார்கள்.

இதனைக் எடுத்துக் கூறிய பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: இந்த அனைத்து அறிவிப்புகளும் தெரிவிப்பது என்னவென்றால், அவர்களது கண்ணியம் அவர்களது தகுதிக்கேற்ப எந்த அளவுக்கு இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு சஹாபாக்களின் உள்ளங்களில் இருக்கவில்லை. மேலும் சஹாபாக்கள் அவர்களுடன் மகிழ்ச்சியாகவும் இருக்கவில்லை. அவ்வாறில்லையென்றால் அவர்கள் ஏன் வானவர்களோ அல்லது ஜின்னோ அவரை கொன்று விட்டார்கள் என்று கூற வேண்டும்? இன்னும் சொல்வதென்றால், இந்த சொற்களை விட கடுமையான சொற்கள் அன்னாரது மரணத்தின்போது கூறப்பட்டுள்ளது. அதனை நான் எனது நாவினால் எடுத்துக் கூற விரும்பவில்லை.

ஆக கிலாஃபத்திடம் பைஅத் செய்யாமலேயே மனிதன் தன்னைத்தானே இஸ்லாமிய அமைப்பில் தனக்கு ஒரு அந்தஸ்தை பெற முடியும் என்று கருதுவது சம்பவங்கள் மற்றும் இஸ்லாமிய போதனைகளுக்கு முற்றிலும் எதிரானதாகும். மேலும் எவர்

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் தங்களின் உடன்படிக்கையினை முறித்துவிட்ட காரணத்தினால் நாம் அவர்களை சபித்து, அவர்களின் உள்ளங்களை கடினமாக்கி விட்டோம். அவர்கள் (வேதத்தின்) சொற்களை அவற்றிற்குரிய இடங்களிலிருந்து புரட்டுகின்றனர். மேலும் அவர்களுக்குக் கூறப்பட்ட அறிவுரையின் ஒரு பகுதியினை மறந்து விட்டனர். மேலும் அவர்களுள் ஒரு சிலரைத் தவிர அவர்களிலிருந்து நம்பிக்கைத் துரோகத்தைத் தவறாமல் கண்டுணர்வீர். எனவே அவர்களை மன்னித்துப் பொறுத்துக் கொள்வீராக. நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (5:14)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

இத்தகைய எண்ணத்தை தமது உள்ளத்தில் கொண்டிருப்பாரோ, அவர் பைஅத்தின் பொருளை கடுகளவு கூட புரிந்திருக்கின்றார் என்று கூட நான் கருத மாட்டேன்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 16 பக்கம் 95–101 – குத்பா ஜுமுஆ 08 பிப்ரவரி 1935)

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களின் மரணம் சிரியாவிலுள்ள ஹூரானில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் உமர் அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டரை வருடத்திற்குப் பிறகு அது நிகழ்ந்தது.

அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்களின் கூற்றிற்கேற்ப, அவர்களது மரணம் சிரியாவின் நகரமான பஸ்ராவில் நிகழ்ந்துள்ளது. இது முஸ்லிம்கள் சிரியாவில் வெற்றி கொண்ட முதல் நகரமாகும்.

அன்னார் மரணமடைந்தது தொடர்பாக மதீனாவிற்கு எப்போது தெரிய வந்தது என்றால் அறிவிப்பில் வருகின்றது, பிஃரே மன்பா அல்லது பிஃரே ஸகனின் கிணற்றில் மதிய வேளையின் கடும் வெயிலில் குதித்த இளைஞர்களில் ஒருவர் கிணற்றில் இருந்தவாறு இவ்வாறு கூறியதை கேட்டார்.

قَدْ قَتَلْنَا سَيِّدَ الْخَزْرَجِ سَعْدَ بْنَ عُبَادَهْ    وَرَمَيْنَاهُ بِسَهْمَيْنِ فَلَمْ نُخْطِ فُؤَادَهْ

அதாவது நாங்கள் கஸ்ரஜின் தலைவர் சஅத் பின் உபாதாவை கொன்று விட்டோம். நாங்கள் இரண்டும் அம்புகளை எய்தோம். நாங்கள் அவரது உள்ளத்தில் அம்புகளை எய்வதில் தவறிழைக்கவில்லை. அந்த இளைஞர்கள் அஞ்சினர். அவர்கள் அந்த நாளை நினைவில் வைத்திருந்தனர். அப்போது சஅத் அவர்கள் அமர்ந்தவாறு சிறுநீர் கழித்தார்கள். அப்போது அவர்கள் கொல்லப்பட்டார்கள். மேலும் அவர்கள் அப்போதே வஃபாத் ஆனார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களின் மரணம் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்தது. அவர்களது இறந்த வருடம் தொடர்பாக கருத்து வேறுபாடு இருக்கின்றது. சில அறிவிப்புகளுக்கேற்ப ஹிஜ்ரி 14 என்றும், சில அறிவிப்புகளுக்கேற்ப ஹிஜ்ரி 15 என்றும், சில அறிவிப்புகளுக்கேற்ப ஹிஜ்ரி 16 என்றும் வந்துள்ளது. ஹஸ்ரத் சஅத் அவர்களின் கபர் பாலஸ்தீனத்திற்கு அருகிலுள்ள முனைஹா என்ற ஊரில் உள்ளது. இந்த ஆதாரம் தப்காத்துல் குப்ராவில் இடம் பெற்றுள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 463 சஅத் பின் உபாதா – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா லாபின் ஹஜ்ர் அஸ்கலானி தொகுதி 3 பக்கம் 56 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 164 சஅத் பின் உபாதா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்போது நான் இரண்டு மர்ஹூம்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அவர்களது ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். அவர்களில் முதலாவது, சத்ர் அஞ்சுமனின் உறுப்பினரான மதிப்பிற்குரிய செய்யது முஹம்மது சர்வர் ஷா சாஹிப் அவர்கள் ஆவார்கள். 8 ஜனவரி அன்று தமது 85 வது வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

கடந்த சில காலமாகவே கேன்ஸர் நோய் இருந்தது. ஆனால் மிகவும் தைரியத்துடனும், பொறுமையுடனும் அவர்கள் இந்த நோயை எதிர்கொண்டார்கள். மேலும் கடைசி வரை தனது கடமையை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்து வந்தார்கள். அன்னார் ஒடிசா மாநிலத்தின் ஸூங்கடா மாவட்டத்தின் ஒரு கலப்பற்ற அஹ்மதி குடும்பத்தைச் சார்ந்தவர். அன்னாரது பாட்டனார் ஹஸ்ரத் செய்யது அப்துர் ரஹ்மான் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். அன்னாரது பாட்டனார் மதிப்பிற்குரிய மவ்லவி அப்துல் அலீம் சாஹிப். மர்ஹூம் அவர்கள் ஒரு சிறந்த ஆலிமாக இருந்தார்கள். கவிஞரும் ஆவார்கள்.

அன்னார் பிறந்த போது அவர்களது தந்தை தனது மாமனாரிடம் பெயர் வைக்குமாறு கூறினார்கள். எனவே அவர்கள் கூறினார்கள்: நான் ஒரு கனவில் செய்யது சர்வர் ஷா சாஹிபைக் கண்டேன். அவர் நமது வீட்டிற்கு வந்துள்ளார்கள். எனவே செய்யது சர்வர் என்று பெயர் வைக்குமாறு கூறினார்கள்.

ஆரம்ப கல்வியை கடக் மாவட்டத்தில் பயின்றார்கள். பிறகு B.A தேர்ச்சி பெற்றார்கள். பிறகு தனியார் பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராக பணியாற்றினார்கள். அதன் பிறகு ஒடிசா ஹை கோர்ட்டில் அஸிஸ்டன்ட்டாக பணியாற்றினார்கள். பிறகு ஆடிட் அலுவலகத்தில் பணியாற்றினார்கள். பிறகு ரிடாயிர்மென்டிற்குப் பிறகு 1995 ஆம் ஆண்டு ஜமாஅத் தொண்டிற்காக தம்மைத்தாமே அர்ப்பணித்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 1996 ஆம் ஆண்டு இவர்களிடம் சில பணிகளை ஒப்படைத்தார்கள். இவர்களை இன்சார்ஜாக நியமித்தார்கள். இவர்களுக்கு உம்ரா செய்யும் நற்பாக்கியமும் கிடைத்துள்ளது. தலைமையக ஆடிட்டராகவும், சில விவகாரங்களில் ஒன்மேன் கமிஷனாகவும் அன்னாரை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நியமித்தார்கள். பிறகு இறுதி வரை இந்த ஆடிட் பொறுப்பிலேயே இருந்தார்கள். மர்ஹூமிற்கு ஒன்பது வருடங்கள்

கஸா போர்டின் தலைவராக தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. அதேபோன்று மேலிடத்தின் சில முக்கிய கமிட்டிகளின் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்துள்ளார்கள். மேலும் மரணமடையும் வரை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் உறுப்பினராக தொண்டாற்றும் நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். ஆளுமைத் திறமை இவர்களிடம் மிகவும் சிறப்பாக இருந்தது. நீண்ட காலம் தலைமையக ஆடிட்டராக தொண்டாற்றும் நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

இவர்களைப் பற்றி ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டார்கள். அதாவது நீங்கள் சிறப்பாக பணியாற்றுகின்றீர்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனுல் ஜஸா. எவ்வித அச்சமுமின்றி உங்களது கொள்கைப் பிடிப்பை வெளிப்படுத்தும் செயல் மிகவும் பிடித்துள்ளது. மாஷா அல்லாஹ். மிகவும் நுட்பமான மற்றும் முக்கிய அம்சங்களின் பக்கம் உங்களது பார்வை செல்கின்றது. நீங்கள் உங்களது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு செய்த பேருதவியை நினைத்துப் பாருங்கள். அதாவது ஒரு சமுதாயத்தினர் தங்களுடைய கைகளை உங்களுக்கு எதிராக நீட்டியபோது அவன் அவர்களுடைய கைகளை உங்களுக்காகத் தடுத்தான். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நம்பிக்கை கொண்டோர், அல்லாஹ்விடத்திலேயே நம்பிக்கை வைக்க வேண்டும். (5:12)

M.Y. Shahul Hameed, Melapalayam

உங்களது பணிகளை செய்து கொண்டே இருங்கள். உங்களை அதிலிருந்து யாரும் தடுக்க முடியாது. அந்த நேரத்தில் இவ்வாறு அவர்களுக்காக துஆ செய்தார்கள். மேலும் உடல் ஆரோக்கியத்திற்காகவும் துஆ செய்தார்கள்.

நாஸிம் தாருல் கஸா எழுதுகின்றார்கள்: காதியானின் கஸா துறையின் பணியாளர்களுடன் அன்பின் தொடர்பு இருந்தது. போர்டில் நிலுவையிலிருந்து வழக்குகளை முடிந்த வரை விரைவாக தீர்ப்பு வழங்குவதற்கு முயற்சி செய்வார்கள். மிகவும் பேணுதலுடன் ஆய்வு செய்வார்கள். நீதியுடன் கூட தீர்ப்பை வழங்க எல்லா வகையிலும் முயற்சி செய்து வந்தார்கள். நல்ல வழிகாட்டி ஆவார்கள். எல்லா விவகாரங்களிலும் அல்லாஹ்வின் வழிகாட்டலை வேண்டி வந்தார்கள்.

இவர்களது மருமகன் டாக்டர் தாரிக் சாஹிப் சீனியர் மெடிக்கல் அஃப்ஸர் நூர் ஹாஸ்பிட்டல் காதியான் அவர்கள் கூறுகின்றார்கள்: தொடர்ச்சியாக தஹஜ்ஜுத் தொழுவது மட்டுமின்றி முபாரக் பள்ளிவாசலில் குறித்த நேரத்தில் தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். கால்கள் தடுமாற்றமடைந்த நிலையிலும், சரியாக நடந்து செல்ல முடியாத நிலையிலும் மற்றவர்களின் உதவியுடன் பள்ளிவாசலுக்கு வருவார்கள். ஜுமுஆ தொழுவார்கள். எப்போதும் குறித்த நேரத்திற்கு சென்று முதல் வரிசையில் அமர்வார்கள். மக்ரிப் முதல் இஷா வரை பள்ளிவாசலிலேயே அமர்ந்தவாறு நவாஃபில் தொழுவதிலும், துஆக்கள் செய்வதிலும், தஸ்பீஹாத் செய்வதிலும் மூழ்கி இருப்பார்கள்.

நாஸிர் ஆலா காதியான் அவர்களும் எழுதியுள்ளார்கள்: இவர்களது நற்பண்புகள் மிகவும் அதிகமாகும். சிரித்த முகத்துடன் சந்திக்கக் கூடியவர். விருந்து உபசரிப்பு செய்பவர். கடும் முயற்சி செய்பவர். ஏழைகளின் மீது அனுதாபம் கொண்டவர். தமது மேலதிகாரிகளுக்கு மிகவும் கட்டுப்பட்டு நடப்பவர். கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பு வைத்திருந்தார்கள். மற்றவர்களுக்கு கிலாஃபத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ள கவனமூட்டி வந்தார்கள்.

அல்லாஹ்வின் அருளால் மூஸி ஆவார்கள். மர்ஹூமின் அனைத்து மகன்களும், மகள்களும் ஒருவர் மற்றவரை முந்திக் கொண்டு ஜமாஅத் பணிகளில் பங்கெடுத்து வருகின்றார்கள்.

இவர்களது சிறிய மகன் செய்யது மஹ்மூத் அஹ்மது காதியான் நூர் ஹாஸ்பட்டலில் தொண்டாற்றி வருகின்றார்கள். இவர்களது இரண்டு மருமகன்களும் தன்வீர் அஹ்மது சாஹிப் மற்றும் டாக்டர் தாரிக் அஹ்மது சாஹிப் ஆகியோர் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் ஆவர். காதியானில் தொண்டாற்றி வருகின்றார்கள். அதே போன்று கடைசி மருமகன் செய்யது ஹஸன் கான் அவர்கள் ரிடாயிர்மண்டிற்குப் பிறகு அவர்கள் ஜமாஅத்தில் தன்னார்வத் தொண்டராக பணி செய்து வருகின்றார்கள்.

சாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மது சாஹிப் மர்ஹூம் அவர்கள் எப்போது வரை நாஸிர் ஆலாவாக இருந்தார்களோ அப்போது வரை எப்போதும் கண்ணியத்தின் வட்டத்திற்குள் இருந்தவாறு ஆடிட் செய்து வந்தார்கள். மேலும் முழு காதியானிலும் மியான் சாஹிபைப் போன்று அன்பு செலுத்தக் கூடியவர் வேறு எவரும் இல்லை என்று கூறி வந்தார்கள். அவர்களிடம் கேள்வியும் கேட்பார்கள். ஷா சாஹிப் சில நேரங்களில் அவர்களது பரிவு மற்றும் அன்பை நினைவு கூர்ந்தவாறு அழுவார்கள்.

காதியானிலுள்ள தர்வேஷ்களுக்கு மிகவும் கண்ணியம் வழங்கி வந்தார்கள். அவர்களும் எளிமையையுடன், தர்வேஷின் வாழ்க்கையை கழித்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர்களுடன் மிகவும் அன்பின் தொடர்பு இருந்தது. அறிஞர்களுக்கு மிகவும் கண்ணியம் வழங்கி வந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அவர்களது பிள்ளைகளுக்கும் அன்னாரது அடிச்சுவட்டில் வழிநடப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா ரப்வாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் லத்தீஃப் அஹ்மது குரைஷி சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய ஷவ்கத் கோஹர் சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் மர்ஹூம் அப்துல் மாலிக் கான் சாஹிப் அவர்களின் மகள் ஆவார்கள். ஜனவரி 5 ஆம் தேதி ரப்வாவில் 77 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அல்லாஹ்வின் அருளால் மூஸி ஆவார்கள். ஆக்ராவில் பிறந்தார்கள். அன்றைய நாட்களில் அவர்களது தந்தை மவ்லானா அப்துல் மாலிக் கான் சாஹிப் அவர்கள் முரப்பியாக அங்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள். பிறகு இவர்கள் தமது பெற்றோர்களுடன் ஹைதராபாத் தெக்கனில் இருந்தார்கள்.

பாகிஸ்தான் நிறுவப்பட்ட பிறகு கராச்சிக்கு குடிபெயர்ந்தார்கள். கராச்சியில் ஆரம்பக் கல்வியை பயின்றார்கள். கல்வியில் மிகவும் சிறந்து விளங்கினார்கள். எப்போதும் நல்ல மதிப்பெண்களை பெற்று வந்தார்கள். சிறிய வயதிலிருந்து மார்க்கத் தொண்டாற்றுவதற்கு அதிக ஆர்வம் இருந்தது வந்தது. கராச்சியில் நாஸிராத் செயலராக இருந்தார்கள். பிறகு கராச்சியின் நாஸிராத்துகளை முதலிடத்திற்கு கொண்டு வந்தார்கள்.

இவர்களது திருமணம் டாக்டர் லத்தீஃப் குரைஷி சாஹிப் அவர்களுடன் 1961 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இதற்குப் பிறகு லண்டனிற்கு வந்து விட்டார்கள். பிறகு இங்கு கல்வியை முழுமை செய்ய டாக்டர் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். எனவே பாகிஸ்தானுக்கு வாருங்கள் என்று அன்னார் கூறினார்கள். மேலும் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் இவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

பிறகு இவர்கள் தமது கணவருடன் இணைந்து முழு முயற்சியுடன் ரப்வா சென்று அங்கு தொண்டாற்றினார்கள். மார்க்கத் தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியமும் அவர்களுக்கு கிடைத்தது. லஜ்னாக்களின் பணிகளை அவர்கள் அங்கு செய்தார்கள். அவர்களது காலத்தில் இருந்த ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு பெண்ணும் இன்னும் சொல்வதென்றால் எனது எண்ணத்தின்படி ஒவ்வொரு குழந்தைகளும் இவர்களை நன்கறிவர். இவர்களது தொண்டுகளைப் பற்றி நன்று அறிந்திருப்பர்.

எனது தாயார் சாஹிப்ஸாதி நாஸிரா பேகம் சாஹிபா அவர்கள் ரப்வாவின் சத்ர் லஜ்னாவாக இருந்தபோது இவர்களை செயற்குழுவில் ஜெனரல் செகரட்டரியாக நியமித்தார்கள். 15 ஆண்டுகள் வரை இந்த பொறுப்பில் அவர்கள் இருந்தார்கள். அவர்களிடமிருந்து பயிற்சி பெற்றார்கள். இதற்குப் பிறகு நிர்வாகத் திறமையுடன் அவர்கள் பணி செய்தார்கள். தலைமையக செயற்குழுவிலும் செயலராக பணியாற்றினார்கள்.

பிறகு நான் இவர்களை பாகிஸ்தானின் தலைமையக ஜெனரல் செகரட்டரியாக நியமித்தேன். ஆறு ஆண்டுகள் வரை அங்கும் அவர்கள் சிறந்த தொண்டை ஆற்றினார்கள். நோயுற்ற காரணத்தினால் லஜ்னா பணிகளை விட வேண்டியது வந்தது. ஆனால் இருந்தபோதிலும் வாய்ப்பு கிடைக்கும்போது ஏதாவதொரு வகையில் தொண்டு செய்து வந்தார்கள். 50 வருடங்கள் வரை பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் நற்பாக்கியத்தைப் பெற்றுள்ளார்கள்.

அவர்களுடன் பணியாற்றிய ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு குழந்தைகளும் அவர்களைப் புகழ்ந்து கூறியுள்ளார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். ஏழைகளுடனும், தேவையுடையவர்களை கருத்தில் கொள்வார்கள். விருந்து உபசரிப்பு மற்றும் சந்தா செலுத்துவதில் குறிப்பான கவனம் செலுத்தி வந்தார்க்ள. சந்தாவை விரைவாக செலுத்தவது இவர்களது நற்பண்பாக இருந்தது.

இன்னும் சொல்வதென்றால், வக்ஃபே ஜதீது பற்றிய அறிவிப்பு இந்த வருடம் செய்யப்பட்டதுமே அவர்கள் சந்தாவை செலுத்தி விட்டார்கள். அறிவிப்பு செய்யப்பட்டதுமே சந்தாவை செலுத்தி விட்டார்கள். ஐந்தாம் தேதி மரணமடைந்தார்கள்.

டாக்டர் குரைஷி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மர்ஹூமாவின் 50 வருட காலகட்டத்தில் சிறந்த மனைவியாகவும், சிறந்த தாயாகவும், சிறந்த சகோதரியாகவும், சிறந்த மகளாகவும் தனது பங்கை அவர்கள் ஆற்றியுள்ளார்கள். ஒரு விஷயத்தை இவர்கள் இங்கு குறிப்பிடவில்லை. அதாவது இவர்கள் சிறந்த மருமகளாகவும் இருந்தார்கள். இவர்களது மாமியார் மற்றும் மாமனாருடன் இருந்தார்கள். நோயுற்ற நிலையிலும் அவர்களுக்கு இவர்கள் தொண்டாற்றி உள்ளார்கள். தாயாரைப் போன்று கவனித்து வந்தார்கள்.

ஆக இவர்கள் ஒரு முன்மாதிரிமிக்க வாழ்க்கையை கழித்த பிறகு இந்த உலகை விட்டு பிரிந்து சென்றுள்ளார்கள். நோய் மிக நீண்ட காலம் இருந்தது. இருந்தபோதிலும் வீட்டு வேலைகளில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். அதனை முழுமை செய்தார்கள். நோயுற்ற நிலையிலும் ஒருபோதும் முறையிட்டது கிடையாது. நோயை மிகவும் பொறுமையுடன் சகித்துக் கொண்டார்கள். கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பு இருந்தது.

இவர்களது குடும்பத்தில் இவர்களது கணவர் டாக்டர் லத்தீஃப் குரைஷி சாஹிப் மட்டுமின்றி மூன்று மகன்களும் இரண்டு மகள்களும் இருக்கின்றார்கள். இரண்டு மகன்களும், ஒரு மகளும் மருத்துவர் ஆவார்கள். ஒருவர் இஞ்ஜீனியர் ஆவார். அனைவரும் நன்கு கல்வி கற்றவர்கள் ஆவர். இவர்கள் மிகவும் நெருக்கடியான நிலைமைகளில் படிக்க வைத்துள்ளார்கள்.

அவர்களது ஒரு மகள் ஒரு முறை அவர்களிடம், நீங்கள் ஒருபோதும் நகை அணிவதில்லையே? நல்ல ஆடைகளை அணிவதில்லையே? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், நான் மிச்சப்படுத்துகின்றேன். உங்கள் படிப்புக்காக அதனை செலவு செய்கின்றேன். மேலும் அதுவே எனது அணிகலன்; மேலும் அதுவே எனது ஆடை; மேலும் அதுவே எனது விருப்பமாகும். நீங்கள் நல்ல உயர் படிப்பை படித்து ஜமாஅத்திற்கு சிறந்த அங்கமாக ஆக வேண்டும் என்று கூறினார்கள்.

நல்ல கனவுகளும், கஷ்ஃபு காட்சிகளும் காணக் கூடிய பெண்மணி ஆவார்கள். இவர்களது பல கனவுகளை இவர்களது குழந்தைகள் எழுதியுள்ளனர். அது முழுமையடைந்துள்ளது. ஒரு மகளிடம், உனக்கு இந்த மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கும் என்று கூறினார்கள். அவ்வாறே அவர்களுக்கு அங்கு இடம் கிடைத்தது. இதுபோன்று எண்ணற்ற கனவுகள் உள்ளன. அல்லாஹ்வின் அருளால் நல்ல பெண்மணி ஆவார்கள். தமது சகோதரிகளை கருத்தில் கொண்டார்கள்.

அவர்களது மகன் அப்துல் மாலிக் எழுதுகின்றார்கள்: ஜமாஅத்திற்கு கலப்பற்ற முறையில் தொண்டாற்றி வந்தார்கள். பல முறை லஜ்னா அலுவலகத்திலிருந்து தாருல் உலூம் வரை கடும் வெயிலில் நடந்தே சென்றுள்ளார்கள். ஒரு முறை கூட புகார் கூறியது கிடையாது. பெருநாள் சந்தர்ப்பத்தின்போது எப்போதும் நெருங்கிய மற்றும் தூரத்து உறவினர்களுக்கும் வீட்டில் தயார் செய்த இனிப்புகளை அனுப்பி வந்தார்கள். மேலும் நாம் மார்க்கத்துடன் தொடர்பு வைத்திருந்தால் அல்லாஹ் ஒருபோதும் நம்மை வீணாக்கி விட மாட்டான் என்று கூறி வந்தார்கள்.

அவர்களது மகள் கூறுகின்றார்கள்: திருமணத்திற்குப் பிறகு எனக்கு குழந்தைகள் பிறந்தன. இவர்கள் அமெரிக்காவில் வசித்து வருகின்றார்கள். எனக்கு எப்போதும் இவ்வாறு அறிவுரை கூறி வருவார்கள். அதாவது அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளில் பொதுவாக தீய சுற்றுச் சூழலிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு உனது குழந்தைகளிடம் அன்பு மற்றும் நட்பு ரீதியிலான தொடர்பை வைத்துக் கொள். வீட்டின் சூழலை எத்தகையதாக நீ வைத்துக் கொள்ள வேண்டுமென்றால், அது உனது குழந்தையின் உள்ளத்தை ஈர்க்க வேண்டும். வெளியே செல்வதற்கு பதிலாக வீட்டில் அதிகப்படியான நேரத்தை செலவழிக்க வேண்டும்.

இன்னொரு மகள் கூறுகின்றார்கள்: மருத்துவ கல்லூரியில் ஒரு முறை சில மாணவிகள் என்னை அஹ்மதி என்பதனால் எதிர்த்தனர். பாயிகாட் செய்தனர். நான் எனது தாயாருக்கு போன் செய்து அழுதேன். எனது தாய் எனக்கு சிறந்த முறையில் அறிவுரை கூறினார்கள். அதாவது இதில் அழுவதற்கு என்ன இருக்கிறது? இது நபிமார்களின் சுன்னத்தாகும். அதன்படி நடப்பதற்கு உனக்கு வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் அஹ்மதிய்யத்தின் காரணமாக உனக்கு எந்த துன்பம் வந்தாலும் அல்லாஹ் ஒருபோதும் உன்னை வீணாக்க மாட்டான். மேலும் தேர்விலும் நீ வெற்றி பெறுவாய் என்று கூறினார்கள்.

அவர்களது மகள் கூறுகின்றார்கள்: எனவே நான் தேர்வில் வெற்றி மட்டும் பெறவில்லை. மாறாக, என்னை கஷ்டத்திற்குள்ளாக்கிய மாணவிகள் அனைவருமே தேர்வில் தோல்வியடைந்தனர்.

அல்லாஹ் மர்ஹூமாவின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் அவர்களது பிள்ளைகளுக்கும் அவர்களது அடிச்சுவட்டில் நடப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. நல்லவர்களாகவும், மார்க்கத்திற்கு தொண்டாற்றக் கூடியவர்களாகவும், கிலாஃபத்துடன் எப்போதும் தொடர்பு வைத்திருப்பவர்களாகவும், பற்றுணர்வின் தொடர்பை வைத்திருப்பவர்களாகவும் அவர்களை ஆக்குவானாக.

நான் கூறியதுபோன்று தொழுகைகளுக்குப் பிறகு இந்த இருவரது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

**தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)**


**தொலைபேசி எண்:**

**1800 103 2131**

**இந்த TOLL FREE எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.**

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 20 February 2020 Issue No. 8

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**இனப் பாகுபாடு**

பல இனங்களாக இருப்பதில் கண்ணியத்திற்கான எந்தவொரு காரணமும் இல்லை. இறைவன் அறிமுகத்திற் கென்றே இந்த இனங்களை உருவாக்கியுள்ளான். இன்றைய நாட்களில் நான்கு தலைமுறை மட்டும் கடந்து விட்டால் உண்மையான முகவரியை தெரிந்து கொள்வது கடினமானதாகும். அல்லாஹ் எனது பார்வையில் இனத்திற்கு எந்தவொரு சான்றும் இல்லை. உண்மையான கண்ணியத்திற்கும் மகிமைக்கும் தக்வா மட்டுமே காரணமாக இருக்கின்றது என்று தீர்ப்பளித்திருக்கும்போது இனங்களுக்கிடையிலுள்ள சண்டைகளில் ஈடுபடுவது இறையச்சமுடையவரின் மகிமைக்கு உகந்ததல்ல.

**இறையச்சமுடையவர் யார்?**

எவர்கள் சகிப்புத்தன்மையுடனும் எளிமையாகவும் நடக்கின்றனரோ அவர்கள்தான் இறையச்சம் உடையவர்கள் ஆவர் என்பது இறைவனின் வார்த்தைகளில் கூறப்பட்டிருக்கின்றது. எவ்வாறு சிறியவர் பெரியவரிடம் பேசுகின்றாரோ அவ்வாறு அவர்களது உரையாடல் இருக்கும். எதில் நமது வெற்றி இருக்கின்றதோ அதையே நாம் எந்நிலையிலும் செய்ய வேண்டும். அல்லாஹ் எவருடைய குத்தகைக்காரனும் அல்ல. அவன் சிறப்பான தக்வாவை விரும்புகின்றான். எவர் இறையச்சத்தை மேற்கொள்வாரோ அவர் உயர்ந்த தகுதியை அடைவார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஆகியோரில் எவரும் வாரிசு என்ற நிலையில் கண்ணியத்தைப் பெறவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தந்தையாரான அப்துல்லாஹ் அவர்கள் இணை வைப்பவராக இருக்கவில்லை என்பது நமது ஈமானாகும். அவ்வாறிருந்தும் இறைவன் அவர்களுக்கு நபித்துவத்தை வழங்கவில்லை. அவர்களது (நபிமார்களது) இயல்பில் இருந்த உண்மையின் காரணமாக இது இறைவனின் அருளாகவே இருந்தது. இதுவே அருளை ஈர்க்கக்கூடியதாக இருந்தது. நபிமார்களின் தந்தையாக இருந்த ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தங்களிடமிருந்து உண்மை மற்றும் இறையச்சத்தின் காரணமாகத் தான் மகனை தியாகம் செய்வதில் தயக்கம் காட்ட வில்லை. அவர்கள் தாமே நெருப்பில் போடப்பட்டார்கள்.

நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது உண்மையையும் பற்றையும் பாருங்கள். அன்னார் எல்லா வகையான தீய திட்டங்களையும் எதிர்த்து நின்றார்கள். பல வகையான துன்பங்களையும் துயரங்களையும் தாங்கிக் கொண்டார்கள். ஆனால், அவற்றை பொருட்படுத்தவில்லை. இந்த உண்மை மற்றும் பற்றின் விளைவாகத்தான் அல்லாஹ்வும் அருள் புரிந்தான். எனவேதான் அல்லாஹ் இவ்வாறு கூறினான்:

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவருக்காக பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கின்றனர்) நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் இந்த நபியின் மீது ஸலவாத்தும் ஸலாமும் ஓதுங்கள். **(33:57)**

இந்த வசனத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ரஸூலே அக்ரம் (ஸல்) அவர்களது நற்செயல்கள் எத்தகையவையாக இருந்தனவென்றால் அல்லாஹ் அவற்றை புகழ்வதற்கும் அல்லது அன்னாரது நற்பண்புகளை ஓர் எல்லைக்கு உட்பட்டதாக ஆக்கும் வகையில் எந்த ஒரு குறிப்பிட்ட சொல்லையும் கூறவில்லை. சொற்களோ கிடைத்திருக்கும். ஆனால், அவனே அவற்றை பயன்படுத்தவில்லை. அதாவது பெருமானார் (ஸல்) அவர்களது நற்செயல்களைப் புகழ்வது என்பது குறிப்பிட்ட எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. வேறு எந்தவொரு நபியின் மகிமையை வெளிப்படுத்தவும் இதுபோன்ற வசனம் பயன்படுத்தப்படவில்லை.

பெருமானார் (ஸல்) அவர்களது ஆன்மாவில் எத்தகைய உண்மையும் பற்றும் இருந்தது என்றால், மேலும் அன்னாரது நற்செயல்கள் இறைவனின் பார்வையில் எந்த அளவு பிரியமானதாக இருந்தனவென்றால் இனி வருங்காலத்தில் மக்கள் நன்றி தெரிவிக்கும் வகையில் அன்னார் மீது தரூது ஓத வேண்டும் என்ற கட்டளையை அல்லாஹ் நிரந்தரமாக வழங்கி விட்டான். பெருமானார் (ஸல்) அவர்களது தைரியமும் உண்மையும் எப்படிப்பட்டவையாக இருந்தனவென்றால் நாம் மேலேயும் கீழேயும் நமது பார்வையை செலுத்தினாலும் அதற்கு இணையான ஒன்று கிடைக்காது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது காலத்தைப் பார்த்தாலும் கூட, அதாவது அவர்களது தைரியம் அல்லது அவர்களது ஆன்மீக உண்மை மற்றும் பற்று ஆகியவை எதுவரை அவர்களை பின்பற்றியவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைப் பார்க்கும்போது தீய நடத்தையுள்ள ஒருவரை சரி செய்வது எந்த அளவு கடினமான விஷயம்? என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும். வேரூன்றிவிட்ட பழக்கங்களை அழித்து விடுவது என்பது சாத்தியமானதாகும். ஆனால், நமது புனித நபி (ஸல்) அவர்கள் விலங்குகளை விட மோசமானவர்களாக இருந்த ஆயிரக்கணக்கான மனிதர்களை சரிசெய்து விட்டார்கள். சிலர் விலங்குகளைப் போன்றே தாய்மார்கள் மற்றும் சகோதரிகளுக்கிடையில் வித்தியாசம் தெரியாமல் நடந்து கொள்பவர்களாய் இருந்தனர். அனாதைகளின் செல்வங்களை விழுங்குபவர்களாகவும் இறந்துபோனவர்களின் செல்வங்களை விழுங்குபவர்களாகவும் அவர்கள் இருந்தனர். அவர்களில் சிலர் நட்சத்திரங்களை வணங்குபவர்களாகவும், சிலர் நாத்திகர்களாகவும், சிலர் பஞ்ச பூதங்களை வணங்குபவர்களாகவும் இருந்தனர். அரபு தீபகற்பம் என்னவாக இருந்தது? அது மதங்களின் தொகுப்பை தன்னகத்தே கொண்டதாக இருந்தது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 22–23; 2003 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad